பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
சென்னை 28

சுற்றறிக்கை எண்.25440/C1/2017, நாள் 20.09.2017

பொருள்: ஆவணப்பதிவு - ஆவணத்துடன் தாக்கல் செய்யப்படும் தனி அதிகார ஆவணத்தின் நகல் கோர்வை செய்திடல், ஒளிவருடல் செய்திடல் அறிவுரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1.பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண் 18339/சி1/12 நாள்.25.04.2012.
2.தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை (வழக்கு எண்.SA-13496(MP 339/16)/மா.த.த.ஆ/2015

****

பார்வையில் காணும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையில் ஆவணம் பதிவு செய்யப்படும் போது அதனுடன் தனி அதிகார ஆவணம் (Special Power of Attorney) ஒன்று தாக்கல் செய்யப்பட்டால் அது பதிவு செய்யப்படும் ஆவணத்துடன் இணைத்து வைப்பது முறையாக இருக்கும் எனவும் பதிவு செய்யப்படும் ஆவண நகல் அளிக்க இயலும் போது அதற்கு அடிப்படையான தனி அதிகார ஆவணம் அழிக்கப்பட்டு விட்டது என்று கூறுவது முறையாக தெரியவில்லை எனவும் தனி அதிகார ஆவணத்தின் நகல் ஒன்றை வைத்து புத்தகம் 1-ல் கோர்க்கப்படும் கிரைய ஆவணத்துடன் தனி அதிகார ஆவணத்தையும் சேர்த்து வைப்பது பயனளிக்கும் எனவும் தற்போது பதிவு செய்யப்படும் ஆவணங்கள் ஒளிவருடல் செய்யப்படுவதால் இதனையும் சேர்த்து ஒளிவருடல் செய்வது பின்னால் தனி அதிகார ஆவணத்தின் உண்மைத் தன்மையை குறித்து கேள்வி எழுந்தால் அது குறித்து உறுதி செய்யப்பயன்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடைமுறை குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு தகவல் ஆணையம் பதிவுத்துறைத்தலைவருக்கு உத்திரவிட்டுள்ளது.

பார்வை 1-ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கையில் பதிவு அலுவலர், ஆவணம் பதிவு செய்யும் முன்னர் ஆவணம் எழுதிக் கொடுப்பவருக்கான ஆவணச்சொத்தின் மீதான உரிமை தொடர்பாக முன்பதிவு ஆவணங்கள் மற்றும் அதன் தொடர்பான வருவாய் ஆவணங்கள் போன்ற ஆதாரங்களை அசலில் பரிசீலித்து அவற்றின் அத்தாட்சி செய்யப்பட்ட நகலினை பாதுகாக்கவும், அவற்றை ஆவணத்தின் ஒரு பகுதியாக ஒளிவருடல் செய்யவும் உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அதன் தொடர்ச்சியாக, பதிவு செய்யப்படும் ஆவணத்துடன் தாக்கல் செய்யப்படும் தனி அதிகார ஆவணம் கோர்வை செய்யப்பட வேண்டியிருப்பினும் அல்லது திரும்ப அளிக்கப்பட வேண்டியிருப்பினும் ஆவணத்துடன் தனி அதிகார ஆவணத்தின் ஒளி நகலினை மற்ற ஆதாரங்களைப்போன்று ஆவணத்தின் ஒரு பகுதியாக இணைத்து தாக்கல் செய்திட ஆவணதாரர்களுக்கு உரிய அறிவுரை வழங்க வேண்டும் எனவும் மேலும் அதனை ஆவணத்தின் ஒரு பகுதியாக ஒளிவருடல் செய்திடவும் அறிவுறுத்தப்படுகிறது. இந்நடைமுறை 25.09.2017 முதல் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

Verified e-Registration

மேற்கண்ட நடைமுறையில் எவ்வித புகாருக்கும் இடமளிக்காது பதிவு அலுவலர்கள் செயல்பட வேண்டும் எனவும் இதனை மாவட்டப்பதிவாளர்கள், சரக உதவிப்பதிவுத்துறைத்தலைவர்கள், துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் தங்கள் ஆய்வின் போது கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் மாவட்டப்பதிவாளர்கள் (தணிக்கை) தங்களின் ஆய்வின் போது 100% இதனை கண்காணிக்க வேண்டும். இதில் மீறல்கள் கண்டறியப்படின் தனியறிக்கை உயர் அலுவலர்களுக்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

இதில் குறைபாடுகள் ஏதும் இருப்பின் சம்மந்தப்பட்ட பதிவு அலுவலர்கள் மற்றும் கண்காணிக்கத்தவறிய உயர் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கை பெறப்பட்டமைக்கு உரிய ஒப்புதலை சார்பதிவாளர்கள் மாவட்டப்பதிவாளர்களுக்கும், மாவட்டப்பதிவாளர்கள் துணைப்பதிவுத்துறைத் தலைவர்களுக்கும், துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் பதிவுத்துறைத்தலைவர் அவர்களுக்கும் அளிக்குமாறு கோரப்படுகிறது.

ஒம்/20.09.2017
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக.

பெறுநர்:
அனைத்து சார்பதிவாளர்கள்,
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
அனைத்து சரக உதவிப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
இயக்குநர்,
பதிவுத்துறைப் பயிற்சி நிலையம்,
முக்கிய ஆணைக்கோப்பு.

Verified RealEstate™